# நியூ சவுத் வேல்ஸ் அரசு
# கோவிட்-19 பதில் நடவடிக்கை

NSW GOVERNMENT

## 70 சதவிகித தடுப்பூசி செயல்திட்டம் (roadmap)

**அக்டோபர் 11 திங்கட்கிழமை** முதல், **முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளவர்களுக்குப்** பின்வரும் கட்டுப்பாடுகள் பொருந்தும்.

**பயணம் மற்றும் போக்குவரத்து**

பயணத்துக்கு **தூர வரம்புகள் இல்லை. சிட்னி பெருநகர்** (மத்திய கடற்கரை, உலங்காங், ஷெல்ஹார்பர் மற்றும் ப்ளூ மவுண்டன் உள்ளிட்டவை) மற்றும் பிராந்திய நியூ சவுத் வேல்ஸ் இடையே பயண விடுமுறைகள் **அனுமதிக்கப்படவில்லை.** பிராந்திய உள்ளூர் அரசுப் பகுதிகளுக்கு (LGAs) இடையிலான பயண விடுமுறைகள் அனுமதிக்கப்படுகின்றன

**குடும்பத்தினரை மற்றும் நண்பர்களைச் சந்தித்தல்**

10 + children

(12 மற்றும் அதற்குட்பட்ட வயதுடைய குழந்தைகள் தவிர்த்து) **10 நபர்கள்** வரை ஒரு வீட்டிற்குச் செல்லலாம், ஒரு வெளிப்புறப் பொதுக் கூட்டத்தில் **30 நபர்கள்** வரை அனுமதிக்கப்படுகிறார்கள்

**திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள்**

ஒரு திருமணம் அல்லது இறுதிச் சடங்கில் **100** நபர்கள் வரை கலந்து கொள்ளலாம்

**வழிபாட்டுத் தலங்கள்**

**10 நபர்கள் உச்சவரம்புடன் பாடகர்கள்** மற்றும் பாடல் **குழுவினர்** (choirs) தவிர்த்து, உள்ளரங்கில் பாடுவதற்கு அனுமதி இல்லை

**உள்ளரங்கு நீச்சல் குளங்கள்**

நீச்சல் பாடங்கள், குழுப் பயிற்சி மற்றும் மறுவாழ்வு போன்ற நோக்கங்களுக்காக மட்டுமே திறந்திருக்கும்

nsw.gov.au/covid-19 **இணையதளத்துக்குச் செல்லவும்**